# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயலாணைகள்**

**முன்னிலை: திருமதி.க.லதா,இ.ஆ.ப.,**

ந.க.சி4/2429/2011, நாள்:29.10.2017

பொருள்: நிலம் - நில உரிமை மாற்றம் - சிவகங்கை மாவட்டம் - சிவகங்கை வட்டம் - பையூர்பிள்ளைவயல் குரூப் - புலஎண்.86/1 - விஸ்தீரணம் 24.58.5 ஹெக்டேர் - அரசு புன்செய் கைப்பற்றில்லாதது என கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ள நிலத்தில் - தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் - அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்போருக்கான அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட - நிலஉரிமை மாற்றம் செய்யக் கோரப்பட்டது - முன்நுழைவு அனுமதி வழங்கி - ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1. சென்னை, தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய மேலாண்மை இயக்குநரது நேர்முகக் கடிதம் எண்.M6/22668/2010. நாள்:10.12.2010.
2. சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களது கடிதம் ந.க.சி4/2429/2011. நாள்:04.07.2011. 01.02.2013.
3. சிவகங்கை கோட்டாட்சியரது கடிதம் ந.க.அ1/7299/2012. நாள்: 24.11.2012.
4. மதுரை கோட்ட தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய செயற்பொறியாளர் கடிதம் Lr.No.923 AE(P) 2012. நாள்: 23.01.2013.
5. மதுரை கோட்ட தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய செயற்பொறியாளர் கடிதம் Lr.No.923 AE(P) 2012. நாள்: 24.10.2017.
6. மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறிப்பு. நாள்: 24.10.2017

---------

**ஆணை:-**

சிவகங்கை வட்டம், பையூர் பிள்ளைவயல் வருவாய் கிராமம் புல எண். 86/1-ல் 5 எக்கர் நிலத்தில் குடிசை மாற்று வாரியத்திற்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் நோக்கத்திற்காக, முன்நுழைவு அனுமதி வழங்கக் கோரி மதுரை கோட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய செயற்பொறியாளரால் கோரப்பட்டது தொடர்பாக, சிவகங்கை வட்டம், பையூர் பிள்ளைவயல் வருவாய் கிராமம், புல எண். 86/1 தேர்வு செய்யப்பட்டு பார்வை 3-ல் காணும் கடிதம் வாயிலாக சிவகங்கை கோட்டாட்சியரால் அறிக்கை அனுப்பப்பட்டது. மேற்படி அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டது.

R. Muniappan

EXEC... TAMILNADU ... BOARD ... MADU...

Scanned with CamScanner

சிவகங்கை வட்டம், பையூர் பிள்ளைவயல் வருவாய் கிராமம் புல எண். 86/1 விஸ்தீரணம் 24.58.5 ஹெக்டேர் அரசு புன்செய் கைப்பற்றில்லாதது என கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. மேலும், மேற்படி புலமானது தடையாணைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரஸ்தாப புலம் காலியாக உள்ளது. ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. இப்புலம் ஆயதப்படை மற்றும் காவலர் குடியிருப்பிற்கு அருகாமையில் உள்ளது. நகரின் முக்கிய பகுதியில் அமைந்துள்ளது. சிவகங்கை பேருந்து நிலையம் மற்றும் ரயில்வே நிலையம் ஆகியவைகளிலிருந்து சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வீடுகள் கட்டத் தகுதியான நிலமாகும் என்பதால் மேற்படி புலத்தில் 5 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம் என சிவகங்கை கோட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

எனவே, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரின் பரிந்துரையின்படி, தேர்வு செய்யப்பட்ட புலமானது அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு தகுதியானதாக உள்ளதாலும், நகரின் முக்கிய பகுதியில் போக்குவரத்திற்கு வசதியானதாக உள்ளதாலும், மேற்படி புலத்தில் குடியிருப்புகள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு கேட்புத்துறையினருக்கு முன்நுழைவு அனுமதி அவசியம் என்பதாலும், அவசர அவசிய நிலை கருதி, குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு ஏதுவாக வருவாய் நிலையாணைகள் 24-ன்கீழான வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு சிவகங்கை வட்டம், பையூர்பிள்ளைவயல் குரூப், புலஎண்.86/1-ல் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திற்கு குடியிருப்புகள் கட்ட பரிந்துரை செய்யப்பட்டுள்ள இடத்தினை விடுத்து மீதமுள்ள பரப்பில் 5 ஏக்கர் நிலத்தினை மட்டும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்ற முறையில் முன்நுழைவு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

மேற்படி முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்ட நிலத்தினை கேட்புத்துறையினருக்கு அளந்து காண்பித்து, கேட்புத்துறையினர் வசம் ஒப்படைத்து, அதற்கான ஏற்புச்சான்றினை அனுப்பிவைக்கவும், நிலமதிப்பு நிர்ணயம் செய்து நில உரிமை மாற்றப் பிரேரணைகள் அனுப்பிவைக்கவும், இவ்வினத்தில் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும்வரை வருவாய் ஆவணங்களில் எவ்வித மாறுதல்களும் செய்யாமல் பராமரித்து வரவும் சிவகங்கை வட்டாட்சியருக்கு உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. நில உரிமை மாற்றம் செய்யப்படும் நிலத்திற்கு நிர்ணயம் செய்யப்படும் நிலமதிப்பினை கேட்புத்துறையினர் செலுத்த சம்மதிக்க வேண்டும்.
2. முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்ட நிலத்தின் அளவைக் காட்டிலும் கூடுதல் இடத்திற்கு பிரேரணை அனுப்புதல் கூடாது.

R. Murugaiah

Scanned with CamScanner

3. எந்த நோக்கத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு மட்டுமே கேட்புத்துறையினர் பயன்படுத்த வேண்டும்.
4. முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டுகளுக்குள் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்ட புலத்தினை கேட்புத்துறையினர் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்.

ஒம்./- க.லதா
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை.

(உ.ப)

மாவட்ட ஆட்சியருக்காக

பெறுநர்:

1) மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
5. காமராஜர் சாலை, சேப்பாக்கம்,
சென்னை-5.

2) செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
மதுரை கோட்டம்.

3) வட்டாட்சியர்,
சிவகங்கை.

நகல்: வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை.
நகல்: முக்கிய ஆணைத் தொகுப்பிற்கு
உபரி: 1

EXECUTIVE ENGINEER
TAMILNADU SLUM CLERANCE BOARD
MADURAI DIVISION

Scanned with CamScanner

உறுப்பினர் செயலர், சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் /

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திருமதி.க.பாண்டீஸ்வரி, AMIE., MBA.,

ந.க.எண்:3613/2019/சிம-4 நாள்:11.12.2019

பொருள்: நகர் ஊரமைப்பு - கட்டிடம் - சிவகங்கை மண்டலம் - சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம்/சிவகங்கை மாவட்டம்/வட்டம் - பையூர்பிள்ளைவயல் கிராமம் பகுதி-I - நிலஅளவை எண்:86/8pt-இல் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு உபயோகக் கட்டடம் 7129.00சமீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 3 தளங்கள் கொண்ட 224 குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுமானத்திற்கு கட்டிட அனுமதி வழங்க - தொழில்நுட்ப இசைவு அளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்கள் கடிதம் ந.க.எண்:931/TPS/2019 நாள்:11.10.2019.
2) சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.சி4/2429/2011 நாள்:29.10.2017.
3) சிவகங்கை உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மான எண்.2 நாள்:15.10.2014.
4) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்:19703/2019/TCP-6 நாள்:14.11.2019.
5) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்:28.11.2019.
6) நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019/நஊ2 நாள்:31.10.2019.
7) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்:23152/2011/ நாள்:11.11.2011.
8) அரசாணை நிலை எண்:86 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:28.03.2012.
9) நன்னிலை வரி கட்டணம், மனுதாரர் செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்:11.12.2019.

*****

உத்தரவு:-

சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம்/சிவகங்கை மாவட்டம்/வட்டம், பையூர்பிள்ளைவயல் கிராமம் பகுதி-I, நிலஅளவை எண்:86/8pt-இல் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு உபயோகக் கட்டடம் 7129.00சமீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 3 தளங்கள் கொண்ட 224 குடியிருப்பு கட்டுமானங்கள் கொண்ட வரைபடத்திற்கு ஒப்புதல் இசைவு அளிக்கப்படுகிறது.

| தளவிபரம் | பரப்பளவு விபரம் |
|---|---|
| தரைதளம் (7 Block) | 2091.04சமீ |
| முதல் தளம் (7 Block) | 2091.04சமீ |
| இரண்டாம் தளம் (7 Block) | 2091.04சமீ |
| மூன்றாம் தளம் (7 Block) | 2091.04சமீ |

EXECUTIVE ENGINEER
TAMILNADU SLUM CLERANCE BOARD

Scanned with CamScanner

07

பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு பார்வை 6-ல் கண்ட அதிகார பகிர்மானத்திற்கு உட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனை ஒப்புதல் மற்றும் கட்டிட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது. ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ./உ.செ.(சி.கூ.உ.தி.கு.)எண்:03/2019 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundation.

2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors' and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்துமிடம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
5. கட்டிடம் கட்டும்போது அரசு அனுமதி பெற்ற வயரிங் காண்ட்ராக்டர் மூலமாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
6. OSR (Park) என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை திறவிடமாக (பூங்காவாக) மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதில் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளக்கூடாது.

**நிபந்தனைகள்:**

1) உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்: 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 11.10.2002ன்படியும் கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள். ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு

R. Manickay

Scanned with CamScanner

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்: 341/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்: 3.11.04-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்படவேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மைநகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
12) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக/ STP Design-ற்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியசட்டம் 1974 பிரிவு 25 (Water Act)ன் படிமேற்படி வாரிய இணக்கம் (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரர் நன்னிலைவரி கட்டணம் ரூ.22,700/– (ரூபாய் இருபத்திஇரண்டாயிரத்து எழுநூறு மட்டும்) Scrutiny Fee ரூ.27500/– (ரூபாய் இருபத்தி எழாயிரத்து ஐநூறு மட்டும்) வளர்ச்சிக்கட்டணம் ரூ.49,000/- (ரூபாய் நாற்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) கூராய்வுக்கட்டணம் ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) மாநில பாரத வங்கியில் செலுத்தி செலுத்துச்சீட்டின் அசல் மற்றும் நகல் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), சிவகங்கை ஊராட்சி ஒன்றியம்,** சிவகங்கை மாவட்டம் அவர்கள் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்** அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11/12/19

உறுப்பினர் செயலர்,
சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம்/
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

11/12/19.

**இணைப்பு:**
உத்தரவு மற்றும் இருதொகுப்பு வரைபடங்கள் மற்றும் படிவம்.

**பெறுநர்:**
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
சிவகங்கை ஊராட்சி ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.

**நகல்:**
1. செயற்பொறியாளர்
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
மதுரை கோட்டம்,
மதுரை - 625 020.

EXECUTIVE ENGINEER
TAMILNADU SLUM CLERANCE BOARD
MADURAI DIVISION

2. தொழில்நுட்ப வைப்பறை - ஒரு தொகுப்பு வரைபடத்துடன்.

Scanned with CamScanner

# வாணியங்குடி ஊராட்சி மன்றம் நடவடிக்கை

முன்னிலை:- **S. புவனேஸ்வரி**, M. Com., தலைவர்

வாணியங்குடி ஊராட்சி, சிவகங்கை ஒன்றியம்

ந.க. 76/19-20 நாள் 4/2/20

பொருள்: வரைபடம் - வாணியங்குடி ஊராட்சி மன்றம் - சர்வே எண்.86/8 ல் வீடு கட்ட அனுமதியளித்து - உத்தரவிடுதல்.

பார்வை: 1) [illegible] என்பவரின் கடித நாள்: 24/1/20
2) ஊராட்சி செயலர், வாணியங்குடி அறிக்கை நாள்: 27/1/20
3) பார்வை ( ) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.1/40780/97, நாள்: 19.08.97

உத்தரவு:-

வாணியங்குடி ஊராட்சி சர்வே நிர் 86/8 ல் வீடு கட்டிடம்கட்ட பார்வை 1-ல் கண்டபடி இணைத்து வரப்பெற்ற கீழ்கண்ட விபரப்படி வரைபடம் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்க உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:-**

1) வரைபடம் அனுமதிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவேண்டும்

2) அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளபடி எவ்வித மாற்றமின்றி கட்டிடம் கட்டி முடிக்க வேண்டும்.

3) பொது நலன்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கட்டிடம் கட்டுவதுடன் சுகாதார முறையில் அமைத்திட வேண்டும்.

4) பொதுநல வாரியங்கள், குடிநீர் ஆதாரங்கள், பொதுப்பாதைக்கான சாலைகள் இவற்றிற்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படாத வகையில் கட்டிடம் கட்ட வேண்டும்.

5) ஊராட்சித் தனி அலுவலர் அல்லது அவரது பார்வையாளர் கட்டிட வேலையை பார்வையிடும்போது ஒப்புதலளித்த வரைபடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட இடங்களை காட்ட அனுமதி பெற்றவர் கடமைப்பட்டவர் ஆவார்.

6) கட்டிடம் கட்டி முடித்ததும் ஊராட்சியிடம் வரிவிதிப்பு பெற வேண்டும். அனுமதிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

S. Bhuvaneswari 4/2/2020
தலைவர்
வாணியங்குடி ஊராட்சி
சிவகங்கை ஒன்றியம்
4/2/20

பெறுநர்:
[illegible handwritten address]

R. Munuswamy
EXECUTIVE ENGINEER
TAMILNADU SLUM CLEARANCE BOARD
MADURAI DIVISION

TNSCB, Madurai Division

Scanned with CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate